# கொழும்பு மாநகர சபை

## ஐரோப்பிய முதலீட்டு வங்கி நிதியளிக்கப்பட்ட பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு திட்டம்

பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டு திட்ட (GCWWMIIP) பகுதி 3 ஆனது ஐரோப்பிய முதலீட்டு வங்கி (EIB) நிதிகளுடன் செயற்படுத்தப்படுவதோடு மேலுள்ள திட்டம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் நிறைவேற்றப்படுவதோடு கொழும்பு மாநகர சபையினால் செயற்படுத்தப்படுகிறது. 2026 ஜுலை 31 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்வதற்கு இலக்கு வைக்கப்பட்டுள்ள கீழுள்ள வேலைகளை செயற்படுத்துவதில் முறையான முகாமைத்துவம், தொழில்நுட்பம் மற்றும் ஒப்பந்த மேற்பார்வையை வழங்குவதற்கு திட்ட முகாமைத்துவ பிரிவில் பின்வரும் பதவி நிலைகளில் ஆட்சேர்ப்புக்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. திட்ட செலவு 50 மில். யூரோவாகும்.

| பதவி நிலை | பதவி எண்ணிக்கை | 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் படி தரம் | கல்வித் தகைமை | அனுபவம் |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட திட்ட பொறியியலாளர் | 02 | PS 03 | ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட சிவில்/ இயந்திரவியல் பொறியியலில் இளமாணிப் பட்டம் | சிவில்/ இயந்திரவியல் பொறியியல் துறையில் குறைந்தது 10 ஆண்டுகள் அனுபவம் மற்றும் பம்பி நிலைய திட்ட கண்காணிப்பு கூடுதல் அனுகூலமாகும். |
| திட்ட பொறியியலாளர் (சிவில்) | 04 | PS 04 | ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியலில் இளமாணிப் பட்டம் | தேவையான சிறப்புப் பிரிவில் குறைந்தது 02 ஆண்டுகள் அனுபவம். |
| கட்டமைப்பு பொறியியலாளர் (சிவில்) | 01 | PS 04 | ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளமாணிப் பட்டம் | Secant Pile வடிவமைப்பு உட்பட கட்டிட கட்டமைப்பு மற்றும் மேற்கட்டமைப்பு மட்டத்தின் கட்டமைப்பு வடிவமைப்பில் குறைந்தது 5 ஆண்டுகள் அனுபவம் |
| புவி தொழில்நுட்ப பொறியியலாளர் | 01 | PS 04 | ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியலில் இளமாணிப் பட்டம் | புவி தொழில்நுட்ப பொறியியல் துறையில் குறைந்தது 5 ஆண்டுகள் அனுபவம் |
| உதவி திட்ட பொறியியலாளர் (தொழில்நுட்ப அதிகாரி) | 02<br>இயந்திரவியல் - 01<br>மின் - 01 | PS 06 | 50 வயதுக்கு உட்பட்ட வயது வரம்பு, தொழில்நுட்ப துறைக்கு தொடர்புடைய பதவி ஒன்றுக்காக மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட NVQ மட்டம் 7 இற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல் | தேவையான சிறப்புப் பிரிவில் குறைந்தது 02 ஆண்டுகள் அனுபவம். |

## GOSL மூலம் நிதியளிக்கப்பட்ட பாரிய கொழும்பு கழிவு நீர் முகாமைத்துவ திட்டம்

37.5 மில்லியன் அமெரிக்க டொலர் செலவுடன் கொழும்பு மாநகர சபை பகுதியில் பாரிய கொழும்பு கழிவு நீர் முகாமைத்துவ திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு இலங்கை அரசாங்கம் ஏற்பாடுகளை செய்துள்ளது. பகுதியளவு பூர்த்தி செய்யப்பட்ட நீரேற்று நிலையங்களை பூர்த்தி செய்தல் மற்றும் கிருளப்பனை நீர்ப்பிடிப்பு பகுதியில் ஈர்ப்பு கழிவுநீர் கட்டமைப்பை பூர்த்தி செய்தல் மற்றும் நகர்புற கழிவுநீர் வசதி திறனை மேம்படுத்துவது இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். திட்டத்தை கண்காணிப்பதற்கு தொழில்நுட்ப அதிகாரிகளை நியமிப்பது அவசியமாகும்.

| பதவி நிலை | பதவி எண்ணிக்கை | 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் படி தரம் | கல்வித் தகைமை | அனுபவம் |
|---|---|---|---|---|
| உதவித் திட்ட பொறியியலாளர் (தொழில்நுட்ப அதிகாரி) | 04<br>சிவில் - 02<br>இயந்திரவியல் - 01<br>மின் - 01 | PS 06 | 50 வயதுக்கு உட்பட்ட வயது வரம்பு, தொழில்நுட்ப துறைக்கு தொடர்புடைய பதவி ஒன்றுக்காக மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட NVQ மட்டம் 7 இற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல் | தேவையான சிறப்புப் பிரிவில் குறைந்தது 02 ஆண்டுகள் அனுபவம். |

**பொது நிபந்தனைகள்:**

- பணியமர்த்தல் காலம்: ஆரம்பத்தில் ஓர் ஆண்டு காலத்திற்காக ஒப்பந்த அடிப்படையைக் கொண்டதாக அனைத்து நியமனங்களும் அமைவதோடு பதவியின் தேவை மற்றும் செயற்திறனில் திருப்தி அடிப்படையில் திட்டக்காலத்தில் வருடாந்த அடிப்படையில் சேவை நீடிப்புக்கான வாய்ப்பு உள்ளது.

பொதுத் துறை அல்லது அரச நிறுவனங்களில் பணியாற்றும் அதிகாரிகள் தமது விண்ணப்பங்களை நிறுவனத்தில் தம்மை பிரதிநிதித்துவம் செய்யும் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும் என்பதோடு ஆர்வமுடையவர்கள் 2025.07.01 ஆம் திகதி பி.ப. 3.00 அல்லது அதற்கு முன்னர் மாநகர ஆணையாளர், கொழும்பு மாநகர சபை, நகர மண்டபம் என்ற முகவரிக்கு தொடர்புடைய கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவ சான்றிதழ்களின் பிரதிகளுடன் தமது சுயவிபரக்கோவையை பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு கோரப்படுகின்றனர். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் திட்டத்தின் பெயர் மற்றும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும். 2019.03.15 இன் 01/2019 முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின்படி, நேர்முகப்பரீட்சை நடைமுறை முன்னெடுக்கப்படுவதோடு அதன்படி சம்பளம் வழங்கப்படும்.

**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை**